சுற்றுலா மற்றும் பண்பாட்டு (பண்–2)த் துறை

செய்தி வெளியீடு எண்.92 நாள்.1.2.2008

## செய்தி வெளியீடு

20.04.07 அன்று நடைபெற்ற சட்டமன்ற பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கென தனியே ஒரு நல வாரியம் அமைக்கப்படும் என பேரவை விதி 110ன் கீழ் அறிவிப்பு செய்தார்கள். அதன்படி, மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில், 'தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரியம்' அமைக்கப்பட்டது. வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு கீழ்க்காணும் நலத் திட்டங்கள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நாட்டுப்புறக் கலைகளை தொழிலாகக் கொண்டு 18 வயது நிரம்பப்பெற்று 60 வயது நிரம்பாதவர்கள் உறுப்பினர் ஆகலாம். வாரியத்தின் உறுப்பினர் கட்டணம் ரூ.100/–. 60 வயது எய்தியவர்களுக்கு மாதந்தோறும் ரூ.300/– ஓய்வூதியமாகவும், மரணமடைந்த கலைஞர்களின் இறுதிச் சடங்கிற்காக ரூ.2000/– மற்றும் அவரது வாரிசுதாரருக்கு ரூ.15,000/– உதவித் தொகையாகவும் வழங்கப்படும். மேலும் பதிவு பெற்ற உறுப்பினர்களின் பிள்ளைகள் 10 ஆம் வகுப்பு முதல் தொழிற் பட்டமேல்படிப்பு வரை பயில ரூ. 1,000/– முதல் ரூ.6,000/–வரை நிதி உதவியும், உறுப்பினர்களின் இரு வாரிசுகளுக்கு திருமண உதவித் தொகையாக தலா ரூ. 2000/–மும், பெண் உறுப்பினர்களின் மகப்பேறு உதவித் தொகையாக ரூ. 3000/– முதல் ரூ.6000/– வரையிலும், கண் கண்ணாடி வாங்க உறுப்பினர்களுக்கு ரூ.500/– உதவித் தொகையும் வழங்கப்படும்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.